மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நாங்குநேரித் தொகுதியில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் இப்போது இல்லை.

தமிழக அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர்.

190—(*வினா எண். 370) திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் பெங்களூருக்கு பழுது பார்ப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) ஆம் ;

(ஆ) நமது அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் எடைபோடவும் மற்றும் சிறுச் பழுதுகளைச் சரி செய்யவும் பெங்களூரிலுள்ள Hindustan Aeronautics Limited என்ற நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது. எடைபோடுதல் மற்றும் பழுதுகள் சரி செய்யப்பட்டு ஹெலிகாப்டர் மீண்டும் சென்னைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த விமானத்தைப் பயன்படுத்துவதற்குச் சரியான நிறைய சந்தர்ப்பங்கள் இல்லாத காரணத்தால் அதை விற்கப் போவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியதாக ஞாபகம். அதைப்போன்ற கருத்து ஏதாவது அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அது கிட்டத்தட்ட, அதிகாரிகள், சில முக்கிய நபர்கள் பயன்படுத்துவதற்காக 67 முறை, மீட்புப் பணிகளுக்காக 22 முறை, மற்றும் மலர் தூவுதல் போன்ற பணிகளுக்காக 16 முறை பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. இப்போது அதனுடைய மராமரிப்புச் செலவு ஆண்டு ஒன்றுக்கு 15 லட்சம் ரூபாய் என்ற

1989 மே 4]

அளவுக்கு ஆகிக் கொண்டு இருக்கின்றது. அது மாத்திரமல்லாமல் அது பழுதுற்ற நிலையில் மீண்டும் அதைப் பயன்படுத்துவதற்கு முன்பு பழுது பார்க்கப்பட்டு சென்னைக்கு கொண்டு வரப்பட்டு இருக்கின்றது. இருந்தாலும் அதை விற்றுவிடலாம் என்கின்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விமானம் சம்பந்தமாக இருப்பதால் இன்னொரு கேள்வியைக் கேட்க ஆசைப்படுகிறேன். சமீபத்திலே பாராளுமன்றத்தில் தூத்துக்குடி விமான நிலையம் தமிழக அரசினுடைய காலதாமதத்தால் இன்னும் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு சிவில் ஏவியேஷன் மினிஸ்டர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்தப் பணிகளைத் துரிதப்படுத்த தூத்துக்குடியிலே விமானம் நிலையம் வருவதற்கு தமிழக அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா என்பதை முதல்வர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள ஆசைப்படு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதே அரசு 1976-க்கு முன்பு பொறுப்பேற்று இருந்தபோதுதான் அந்த விமான நிலையத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பது அந்த வட்டாரத்திலுள்ள பீட்டர் ஆல்போன்ஸ் உட்பட அனைவருக்கும் மிக நன்றாகத் தெரியும். எனவே மிகத் தீவிரமாகத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த ஹெலிகாப்டர் எப்போது வாங்கப்பட்டது ? ஒரு சர்ச்சை, ஹெலிகாப்டர் விஷயமாக அகில இந்திய ரீதியில் பிரிட்டனிலிருந்து வாங்கக் கூடாது என்று நிபுனர் குழு சொல்லி இருந்தும் மத்திய சர்க்கார் ஏராளமாக ஹெலிகாப்டர் வாங்கி அந்த ஹெலிகாப்டரில் சென்ற சில நிபுணர்கள் பாண்டிச் சேரிக்குப் பக்கத்தில் விழுந்து இறந்ததும் ஞாபகம் இருக்கும். ஆகையினால் இந்த ஹெலிகாப்டர் பற்றிச் சந்தேகம் ஏற்படு கிறது. இந்த ஹெலிகாப்டர் அப்போது வாங்கப்பட்டதா ? இப்போது இந்த சிஸ்டத்தில் வாங்கப்பட்டதா ? அதனுடைய நிலைமை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த ஹெலிகாப்டர் 1982 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் பெங்களூரிலுள்ள இந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டது. மத்திய அரசினுடைய ஹெலிகாப்டர்கள் கீழே விழுந்ததற்கும், இதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த ஹெலிகாப்டர் வாங்கியதிலிருந்து இதுவரை 'ஐடில்' ஆக இருந்த காலத்தில் அதற்குப் பராமரிப்புச் செலவுக்கும், பாதுகாப்புக்காகவும் பயன் இல்லாமலேயே செலவிட்ட தொகை எவ்வளவு? அதனை வாங்குவதற்கும், அதன் பராமரிப்புச் செலவுக்காகவும்—அது இயங்காமலே—நாம் கட்டிய பணம் எவ்வளவு என்று மாண்புமிகு முதல்வரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பொது பராமரிப்புக்காக சென்னை விமானப் பயிற்சி நிலையத்திற்கு ஆண்டு தோறும் 2,50,000 ரூபாய், ஓட்டுநர், பைலட் சம்பளம், வீட்டு வாடகை மற்றும் இதர சலுகைகள் 1,50,000 ரூபாய்; எரிபொருள் போன்றவை 1,50,000 ரூபாய்; உதிரி பாகங்கள் 1,50,000 ரூபாய்; இன்ஷ்யூரன்ஸ் ஐந்து இலட்சம் ரூபாய்; 200/400 மணி ஆய்வுகள் 2 இலட்சம் ரூபாய், இதர செலவுகள் ஒரு இலட்சம் ரூபாய். ஆக மொத்தம் 15 இலட்சம் ரூபாய் இதனுடைய பராமரிப்புக்காக ஆகிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விமானத்தை ஓட்டுவதற்காகப் பைலட் இந்த அரசாலே அமர்த்தப்பட்டிருக்கிறாரா அல்லது வேறு நிறுவனத்திடமிருந்து அந்த பைலட்டினுடைய பணி கோரிப்பெறப்பட்டனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே இந்த ஹெலிகாப்டரைப் பராமரிக்கும் பொறுப்பு, சென்னை விமானப் பயிற்சி நிலையத்திடம் முதலிலே ஒப்படைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இந்திய விமானப் படையிடமிருந்து பெறப்

1989 மே 4]

பட்ட இரண்டு பைலட்டுகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களது மாற்றுப் பணிக் காலம், deputation period முடிவு பெற்றதும், விமானப் படையிலேயிருந்து ஓய்வு பெற்ற ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநராக நியமிக்கப்பட்டார். இவர் தமது சொந்த ஊரான ஹைதராபாத் செல்லவும், மேலும் ஆந்திர அரசிடம் உள்ள ஹெலிகாப்டரை இயக்கவும் விருப்பப் பட்டதால் 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பணியிலே யிருந்து விடுவிக்கப்பட்டார். அதற்குப் பிறகு அந்த பைலட் இடம் நிரப்பப்படவே இல்லை ; காலியாக இருக்கிறது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த மாநிலங்களில் அவசர, அவசியக் காரியங் களுக்காக இது போல, தமிழக அரசு ஹெலிகாப்டர் வாங்கி யதைப் போல பிற மாநிலங்களிலே ஹெலிகாப்டர்கள் வாங்கி உபயோகப்படுத்துவது பற்றி தமிழக அரசினுடைய கவனத்திற்கு ஏதாவது தகவல் இருக்கிறதா? அல்லது அவசரக் காலங்களிலே பயன்படுத்திக் கொள்வதற்கு இராணுவ இலாக்காவிலிருந்து மாநில அரசு இப்படி ஹெலிகாப்டர்கள் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எந்தெந்த மாநிலத்தில் இப்படிப்பட்ட ஹெலிகாப்டர்கள் இருக் கின்றன என்ற விவரங்கள் அரசிடம் இல்லை. ஆனால் ஒன்றைச் சொல்ல இயலும். ஆந்திர மாநில அரசாங்கத்தின் உபயோகத் திற்காக 6–8–1982 முதல் 9–8–1982 ஆகிய நான்கு நாட் களுக்கும், 12–10–1982 முதல் 20–10–1982 வரை ஒன்பது நாட்களுக்கும், 21–8–1987 முதல் 13–12–1987 வரை, ஆக மொத்தம் 115 நாட்களுக்குமாக இது ஆந்திர அரசினுடைய உபயோகத்திற்காக அனுப்பப்பட்டது. ஆனால், அதற்கான வாடகைக் கட்டணம் எதுவும் வசூலிக்க முடியவில்லை. மற்ற மாநிலங்களுடைய உபயோகத்திற்காக நாம் இங்கிருந்து அனுப்பி வைத்திருக்கிறோம். அதற்கு வாடகைக் கட்டணம் எதுவும் வசூலிக்க முடியாது. ஏனென்றால், தனி உபயோகத்திற்கு என்று பதிவு செய்யப்பட்ட ஹெலிகாப்டருக்குக் கட்டணம் வசூலிக்க இயலாது. மற்ற மாநிலங்களைப் பற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1989 மே 4

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஹெலிகாப்டர், மறைந்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுதுதான் வாங்கப்பட்டது. ஆக, அவர் கொண்டு வந்த எத்தனையோ திட்டங்களையெல்லாம் ரத்து செய்கின்ற முறையிலேதான், இதுவும் அந்த அடிப் படையிலேதான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வது, வெள்ளம் மற்ற இதர நேரங்களிலே மாண்புமிகு முதல்வரவர்கள் உடனடியாகச் சென்று அதற்கு நிவாரணம் தேடுவதற்குத்தான் இந்த விமா னத்தைப் பயன்படுத்துவது என்ற அடிப்படையிலேதான் இது வாங்கப்பட்டது. ஆகவே, மீண்டும் மாண்புமிகு முதலமைச் சரவர்கள் இதை மறு பரிசீலனை செய்து, இந்த விமானத்தை வேண்டுமானால் இது 82 என்று இருப்பதால், பழைய விமானம், காலமாகிவிட்டது என்ற காரணத்தால் இதை விற்று விட்டு, வேறு புதிய விமானமாவது மாண்புமிகு முதல்வரவர்கள் வாங்கி தமிழக அரசு நிலையாக வைத்துக் கொள்வதற்கு ஒரு நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கேள்வியிலேயே ஒரு குற்றச்சாட்டையும் மாண்புமிகு உறுப்பின ரவர்கள் சொன்னார்கள். அது அனுமதிக்கப்படுவதில்லை என்றாலும கூட, அதை நான் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சராயிருந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த எல்லாத் திட்டங் களையும் இந்த அரசு மாற்றி விட்டது என்ற குற்றச்சாட்டு உண்மையானதல்ல. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு முன்பே தியாகராயரால் தொடங்கப்பட்டு, முதலமைச்ச ராயிருந்த காமராஜர் அவர்களால் விரிவாக்கப்பட்டு, அதற்குப் பிறகும் கைவிடப்படாமல் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு, பிறகு மாண்புமிகு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர் களால் மேலும் விரிவாக்கப்பட்ட சத்துணவுத் திட்டம் கை விடப்படவில்லை என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன். அது மாத்திரம் அல்ல, அவர்களுடைய ஆட்சிக் காலததில் எல்லாப் பெயர்களும் எடுக்கப்பட்டன.

1989 மே 4]

நான் கூடக் கேள்விப்பட்டேன். ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அவர்கள் நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டபோது நல்ல பெயரை எடுக்க வேண்டுமென்று யாரோ

(முற்பகல் 9-10)

சொன்னதாகவும், அதன் காரணமாக என்னுடைய பெயர்களையெல்லாம் அவர்கள் எடுத்து விட்டார்கள் என்று கூட நான் கேள்விப்பட்டேன். (சிரிப்பு) ஆனால், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இங்கே கூட போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது—ஒரு உறுப்பினர் பேசினார்— அன்னை சத்தியா என்ற போக்குவரத்துக் கழகத்தினுடைய பெயரை மாற்ற வேண்டுமென்று.— அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அது மாற்றப்பட மாட்டாது என்று பதில் அளித்தார்கள். எனவே, பேருள்ளத்திற்கு, பெருந்தன்மைக்குச் சொந்தக்காரர்கள், உண்மையான அண்ணாவின் தம்பிகளாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தார் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த ஹெலிகாப்டரைப் பொறுத்த வரையில் இது எம்.ஜி.ஆர். வாங்கியதால் விற்கிறீர்களா என்று கேட்பது நியாயமற்ற கேள்வி. அது பழசாகி விட்ட காரணத்தால் அதை விற்கின்றோம். அதைத் தவிர வேறு எந்த விதமான உள் நோக்கமும் கிடையாது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வள்ளியாற்றின் குறுக்கே பாலம்.

191— *வினா எண். 299) திரு. ஆ. பாலையா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக்குறிச்சியில் வள்ளியாற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் பாலம் கட்டி முடிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன ?

(ஆ) பாலம் எப்போது கட்டி முடிக்கப்படும் ?